Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No STC.NO.1170/2025, Cr.No.47/2025, Kurisilapet PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.3, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திக் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | முனிசாமி | தொழில் | ஆட்டோ ஓட்டுநர் |
| கிராமம் | கல்லாத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 18th day of September 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை (எதிரி ஆஜர்)**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுநராக உள்ளேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ எனக்கு தெரியும். கடந்த 17.04.2025 அன்று 02.30 மணியளவில் நான் மிட்டூரில் இருந்து அ.சா..1 மற்றும் அ.சா.2 ஐ ஆட்டோவில் அழைத்து வந்து கொண்டிருந்தேன். அப்போது ஆண்டியப்பனூர் பேருந்து நிறுத்தம் அருகே வந்த போது எதிரி ஈஸ்வரன் இருசக்கரவாகனத்தில் வந்து என்னுடைய ஆட்டோவை வழி மறித்து ஆட்டோ வை குரிசிலாப்பட்டு காவல் நிலையத்திற்கு விடுமாறு மிரட்டினார். நான் வெளியே செல்ல வேணடும் என்று மறுத்தேன். பின்னர் பொன்னுசாமி என்னுடைய ஆட்டோவை எடுக்குமாறு சொன்னதால் நான் ஆட்டடோவை எடுத்துக் கெசாண்டு இருணாப்பட்டு பேருந்து நிறுத்தத்திடம் சென்றபோது மீண்டும் வழிமறித்து காவல் நிலையத்திற்கு விடுமாறு கூறினார். நான் ஏன் செல்ல வேண்டும் என்று சொன்னதால் அ.சா.1 க்கும் எதிரிக்கும் இடையே வாய்த்தகறாரு ஏற்பட்டபோது எதிரி அ.சா.1ஐ தேவிடியா பையா நீ மாட்டினாய் உன்னை ஒழிக்காமல் விடமாட்டேன்" என்று அசிங்கமாக திட்டினார். பின்னர் எதிரி அ.சா.1 ஐ கல்லால் முதுகின் மீது தாக்கி இடது கையின் நடுவிரலை கடித்தார். நான் சண்டையை விலக்கி விட்டு பின்னர் வந்து விட்டேன். நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிதான் அ.சா.1 ஐ தாக்கினார் என்று சாட்சியால் அடையாளம் காட்டப்பட்டது. இது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

அ.சா.1 எனக்கு மாமா ஆவார். எதிரி என்னுடைய உறவினர் அல்ல. எதிரிக்கும் அ.சா1 க்கும் இடையே உள்ள சொத்து பிரச்சனை குறித்து எனக்கு தெரியாது. அ.சா.1 எனக்கு தூரத்து சொந்தம். எதிரிக்கும் அ.சா.1க்கும் உள்ள பிரச்சனை தெரிந்தும் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி ஆட்டோவை வழிமறித்து அ.சா.1 பிரச்சனை செய்ததால் தான் என்னை காவல் நிலையத்திற்கு ஆட்டோவை விடுமாறு கூறினார் என்றால் சரியல்ல. எதிரி அ.சா.1 ன் செல்போனை பறித்ததை நான் பார்த்தேனா என்றால் இல்லை, நான் சண்டையை விலக்கி மட்டுமே விட்டேன். என்னுடைய வாகனத்தின் எண் மற்றும் ஆவணம் குறித்து என்னுடைய விசாரணையில் கூறாததால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 என்னுடைய தூரத்து உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை :– இல்லை**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.09.18 19:36:34 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No STC.NO.1170/2025, Cr.No.47/2025, Kurisilapet PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நடராஜ் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | ராஜகோபால் | தொழில் | தனியார் நிறுவன ஊழியர் |
| கிராமம் | நாராயணபுரம் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 18th day of September 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u> (எதிரி ஆஜர்)

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் பெங்களூருவிலுள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய சித்தப்பா ஆவார். கடந்த 17.04.2025 அன்று நான் சித்தப்பாவுடன் மிட்டூருக்கு நிச்சயதார்த்தத்திற்கு சென்று விட்டு மீண்டும் வீட்டிற்கு கார்த்தி என்பவரின் ஆட்டோவில் திரும்பி வந்து கொண்டிருந்தோம். ஆட்டோவை கார்த்தி தான் ஓட்டி வந்தார். அன்றைய தினமே சுமார் 02.30 மணியளவில் ஆண்டியப்பனூர் பேருந்து நிறுத்தம் அருகே எதிரி எங்களை மடக்கி ஆட்டோவிற்கு முன்னால் இருசக்கர வாகனத்தை நிறுத்தினார். ஆட்டோ ஓட்டுநரை காவல் நிலையத்திற்கு ஆட்டோவை எடுத்து செல்லுமாறு கூறினார். அதற்கு ஆட்டோ ஓட்டுநர் நான் ஏன் ஆட்டோவை நிறுத்த வேண்டும் என்று கூறினார். பின்னர் எதிரி என் சித்தப்பாவை பார்த்து "தேவிடியா பையா" என்று ஆபாசமாக திட்டி அவரின் கல்லை எடுத்து முதுகின் மீது குத்தினார். பின்னர் அ.சா.1–ன் மகன் கலையரசன் சம்பவம் கேள்விபட்டு அங்கு வந்து அவர் மூலம் 108 ஆம்புலன்ஸில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அ.சா.1 ஐ சேர்த்தார். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

எதிரி மற்றும் அ.சா.1 ஆகியோர் என்னுடைய சித்தப்பா ஆவார்கள். இருவருக்கும் நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 பிரச்சனை செய்ததால் தான் எதிரி அவரை காவல் நிலையத்திற்கு அழைத்தார் என்றால் எனக்கு தெரியாது. அ.சா.1 எதிரியை அடித்ததற்காக அவரின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இருவருக்கும் உள்ள பிரச்சனைகள் குறித்து எனக்கு தெரியாது. எதிரி அ.சா.1 னிடம் இருந்து செல்போனை பறித்த போது நான் பார்த்தேனா என்றால் நான் அங்கு தான் இருந்தேன், ஆனால் பார்க்கவில்லை. நான் அ.சா.1–ற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :– இல்லை**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.09.18 19:36:44 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No STC.NO.1170/2025, Cr.No.47/2025, Kurisilapet PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பொன்னுசாமி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | அப்பாவுக்கவுண்டர் | தொழில் | கூலி |
| கிராமம் | நாராயணபுரம் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 18th day of September 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u> (எதிரி ஆஜர்)**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 17.04.2025 அன்று நான் என்னுடைய அண்ணன் மகன் நடராஜ் என்பவருடன் மிட்டூருக்கு நிச்சயதார்த்தத்திற்கு சென்று விட்டு மீண்டும் வீட்டிற்கு கார்த்தி என்பவரின் ஆட்டோவில் திரும்பி வந்து கொண்டிருந்தோம். ஆட்டோவை கார்த்தி தான் ஓட்டி வந்தார். அன்றைய தினமே சுமார் 03.15 மணியளவில் இருணாப்பட்டு அருகே வந்த போது, ஆண்டியப்பனூரில் இருந்து என்னுடைய அண்ணன் ஈஸ்வரன் இருசக்கரவாகனத்தில் எங்களை துரத்தி வந்து ஆண்டியப்பனூர் பேருந்து நிறுத்தம் அருகே எங்களை மடக்கினார். நாங்கள் ஆட்டோவை நிறுத்தாமல் சென்ற போது, இருணாப்பட்டு பேருந்து நிறுத்தம் அருகே எங்களை மடக்கி ஆட்டோவிற்கு முன்னால் இருசக்கர வாகனத்தை நிறுத்தினார். ஆட்டோ ஓட்டுநரை காவல் நிலையத்திற்கு ஆட்டோவை எடுத்து செல்லுமாறு கூறினார். அதற்கு ஆட்டோ ஓட்டுநர் நான் ஏன் ஆட்டோவை நிறுத்த வேண்டும் என்று கூறினார். பின்னர் என் அண்ணன் என்னைப்பார்த்து "தேவிடியா பையா, இன்னைக்கு தான் மாட்டினாய் நீ, ரொம்ப நாள் காத்துக் கொண்டிருந்ததேன் என்று ஆபாசமாக திட்டி என்னுடைய சட்டையைப்பிடித்து ஆட்டோவிலிருந்து இழுத்து கீழே தள்ளி கல்லை எடுத்து என் முதுகின் மீது குத்தினார். பின்னர் இடது கையில் நடுவிரலை கடித்து விட்டார். உடனடியாக நடராஜ் மற்றும் கார்த்தி என்பவர்கள்அவரை தடுத்து விலக்கிவிட்டார்கள். பின்னர் என் சட்டைப்பையில் இருந்து கீழே

விழுந்த செல்போனை என் அண்ணன் ஈஸ்வரன் என்பவர் எடுத்துச் சென்றார். அந்த செல்போனை இன்று வரை என்னிடம் கொடுக்கவில்லை. அவர் என் விரலை கடித்ததில் எனக்கு மயக்கம் ஏற்பட்டது. பின்னர் என் மகன் கலையரசன் சம்பவம் கேள்விபட்டு அங்கு வந்து அவர் மூலம் 108 ஆம்புலன்ஸில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். நான் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்து போது குரிசிலாப்பட்டு போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர். நான் 2 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னர் நான் சிகிச்சை முடிந்து வீடு சென்று விட்டேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

எனக்கும் எதிரிக்கும் வழி சம்பந்தமாக நிலப் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது நானும் பிரச்சனை செய்ததால் என்னை காவல் நிலையத்திற்கு எதிரி அழைத்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு காவல் நிலையத்திற்கு அழைத்ததாக முதல் தகவல் அறிக்கை மற்றும் முதல் விசாரணையில் கூறியுள்ளது தவறு என்றால் சரிதான். நான் எதிரியை அடித்ததாக என் மீது ஒரு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அ.சா.2 நடராஜ் என்னுடைய அண்ணன் மகன். நான் கூறுவது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரியின் மீது பொய் புகார் அளித்துள்ளேன் என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும்வ சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையிலும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போதும் எதிரி என்னை கல்லால் தாக்கியதாக கூறாமல் தற்போது முதல் விசாரணையில் கூறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.09.18 19:36:56 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.